22 FEB 2000
22 FEB 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: i வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 09 திங்கட்கிழமை (21 - 02 - 2000) VALAMPURI ஒலி: 64

★ அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக

# அரசுடன் பேசுவதா? இல்லையா?

# ஐ. தே. க. செயற்குழு தீர்மானிக்கும்!

## சிறிகோத்தாவில் இன்று கூட்டம்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நாளை ஐக்கிய தேசியக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ள அதேசமயம் இப் பேச்சுவார்த்தையில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்வதா? இல்லையா? என்பதை கட்சியின் செயற்குழு இன்று கூடி தீர்மானிக்கவுள்ளதுடன் யார்? யார்? பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது எனவும் தீர்மானிக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால்சமர்ப்பிக்கப்படவிருக்கும்அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக இன்று கூடவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

கட்சித் தலைமையகமான சிறிகோத்தாவில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிப தேசியக் கட்சிச் செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுடன் நாளை நடாத்த இருக்கும் பேச்சு

[6 ஆம்பக்கம் பார்க்க]

## பொதுசன ஐக்கிய முன்னணியின் பட்ஜெட் அரச வங்குரோத்தை எடுத்துக்காட்டுகிறது

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

''பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் சமர்ப்பிக்பிக்கப்பட்டுள்ள ஆறாவது வரவு செலவுத்திட்டம், அரசாங்கம் வெறும் கையுடன் உள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளதுடன், ஒரு மாயையை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குருநாகல் ஐ, தே. கட்சி செயற்குழு அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

உடுத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் வீரவேங்கை லதா அல்லது சுடர்விழி (மகேந்திரன் புஸ்பலதா) யாழ்ப்பாண மாவட்டம் என்ற போராளி உயிரிழந்ததாக புலிகளின் குரல் அறிவித்துள்ளது, (ந)

## யாழ். கடல்நீரேரியில் மீன்பிடிப்பதற்கு ஒரு வாரத்தில் அனுமதி கிடைக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கடல்நீரேரியில் மீன்பிடிப்பதற்கு அடுத்து வரும் ஒரு வாரத்திற்குள் அனுமதி கிடைத்துவிடுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) நேற்றுத் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்கள் மீன்பிடிப்பதற்கு உடன் அனுமதிக்கப்படுவதாக ஏற்கனவே வெளிவந்த செய்தி தொடர்பாக கேட்டபோதே அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் வீடுவீடாகதேடுதல்.

பருத்தித்துறை நகரப்பகுதி நேற்றுக் காலை இராணுவத்தினரால் சுற்றி வளைத்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது,

இத்தேடுதலின்போதுபடையினர் வீடுவீடாகச் சென்று அடையாள அட்டைகள் மற்றும் குடும்ப அட்டைகளைப் பார்வையிட்டதாகத் தெரிய வருகின்றது, (52)

★ யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கே

## புலிகள் ஆனையிறவு முகாம் மீது தாக்குதல்களை தொடுத்துள்ளனர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆனையிறவு மீதான தமது தாக்குதலைத் தீவிரப்படுத்தி முன்னெடுப்பதன் நோக்கம் யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கே என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஆனையிறவை விடுதலைப்புலிகள் கைப்பற்றுவதன்மூலம் யாழ்ப்பாணத்தில் அவர்கள் மீண்டும் பலம் பெறுவதற்கும் வெளிநாடுகளின் பார்வையில் தாம் இராணுவ நிலையில் பலம் பொருந்தியவர்கள் என்ற நிலையை தோற்றுவிக்கவும் தமது அரசியல் பலத்தை விஸ்திரப்படுத்தவுமேயாகும்..

போர்த்துக்கேயர் காலம்தொட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

1999 ல் காணாமல் போனவர்களின் உறவினர்

## யாழ்.மத்திய கல்லூரிக்கு இன்று காலை வருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைப்பு

செம்மணிப் புதைகுழி விடயம் சம்பந்தமாக முறைப்பாடு செய்தவர்களும் 1999ஆம் ஆண்டு காணாமற் போனதாக கூறப்படும் குடும்பங்களில் உள்ள குடும்ப உறுப்பினர்களும் இன்று காலை 10 மணிக்கு யாழ், மத்திய கல்லூரிக்கு சமூகம் கொடுக்மாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை செம்மணிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதமிருந்த படையினரை

## பார்ப்பதற்குசங்கதலைவரையும்தமிழ்தெரிந்த ஒருவரையும் அனுமதியுங்கள்

உண்ணாவிரதம் இருக்கும் 15 படையினரை அவர்களது பெற்றோர் உறவினர்கள் சென்று பார்ப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது போல் காணாமல் போன படையினரின் பாதுகாவலர் சங்கத் தலைவரையும் தமிழ் தெரிந்த ஒருவரையும் செல்ல அனுமதிக்க வேண்டுமென சங்கத் தலைவர் ஈ.பி. நாணயக்கார அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

களுத்துறை சிறைச்சாலை மோதலில்

## பலமான ஆயுதத்தாக்குதலில் ஏற்பட்ட காயத்தினால்தான் கைதி மரணமானார்

### நீதிவான் தீர்ப்பு

(கொழும்பு)

களுத்துறையில் சிறை அதிகாரிகளுக்கும் கைதிகளுக்கும் இடையிலான மோதலில் கொல்லப்பட்ட ஜேசுதாசன் என்பவர் ஆயுதங்களால் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்களாலேயே மரணம் அடைந்துள்ளதாகக் களுத்துறை நீதிபதி ஹம்சா தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மோட்டார்சைக்கிள் மோதி ஒருவர் பலத்தகாயத்துடன் ஆஸ்பத்திரியில்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை யாழ். பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் வீதியால் வந்துகொண்டிருந்த ஒருவருடன் மோதியதில் அந்தநபர் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

இவர் உடனடியாக மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலை அதிதீவிர சிகிச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா பிரதேச செயலகத்தில்

## போலி அடையாள அட்டை வழங்கிய சிற்றூழியர் ஒருவர் கைதாகினார்

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரின் கையொப்பம் இட்டு போலியான முதியோர்அடையாள அட்டையை விநியோகித்துவந்த இச்செயலகத்தின் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த சிற்றூழியர்ஒருவரைப்பொலிஸார்கடந்தவெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

வன்னியிலிருந்து வரும் பயணிகளுக்கு இந்தப் போலியான முதியோர் அடையாள அட்டையை 2000 ரூபா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம் மாதம் 20 ஆம் திகதிவரை விமானப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக தரப்படுகின்றது.

சாவகச்சேரி

| | |
|---|---|
| 131381 ஏ | 130506 ஏ |
| 130506 பி | 131439 ஏ |
| 131460 ஏ | 134957 ஏ |
| 134957 பி | 134957 சி |
| 134957 டி | 134957 ஈ |

கரவெட்டி

| | |
|---|---|
| 135010 ஏ | 135011 ஏ |
| 135011 பி | 135083 ஏ |
| 135158 ஏ | 135158 பி |
| 135158 சி | 135158 டி |
| 135177 ஏ | 135177 பி |
| 135177 சி | 135231 ஏ |
| 135231 பி | 135231 சி |
| 135231 டி | 135244 ஏ |
| 135248 ஏ | 135286 ஏ |
| 137495 ஏ | 137495 பி |

கோப்பாய்

| | |
|---|---|
| 128185 ஏ | 128185 பி |
| 131563 ஏ | 131563 பி |
| 133937 ஏ | 134009 ஏ |
| 134016 ஏ | 134016 பி |
| 134025 ஏ | 134025 பி |
| 134025 சி | 134025 டி |
| 134026 ஏ | 134026 பி |
| 134088 ஏ | 134088 பி |
| 134088 சி | 134088 டி |
| 134124 ஏ | 134124 பி |
| 134177 ஏ | 134186 ஏ |
| 134186 பி | 134191 ஏ |
| 134191 பி | 135986 ஏ |
| 135990 ஏ | 135990 பி |
| 135997 ஏ | 135997 பி |
| 135998 ஏ | 135998 பி |
| 136230 ஏ | |

நல்லூர்

| | |
|---|---|
| 136024 ஏ | 136106 ஏ |

பருத்தித்துறை

| | |
|---|---|
| 129638 ஏ | 131024 ஏ |
| 131024 பி | 131025 ஏ |
| 131046 ஏ | 132460 ஏ |
| 132460 பி | 135077 ஏ |
| 135090 ஏ | 135095 ஏ |
| 135156 ஏ | 135157 ஏ |
| 135310 ஏ | 137501 ஏ |
| 137501 பி | |

உடுவில்

| | |
|---|---|
| 123953 ஏ | 123953 பி |
| 133890 ஏ | 134206 ஏ |
| 134234 ஏ | 134238 ஏ |
| 134238 பி | 134238 சி |
| 134251 ஏ | 134257 ஏ |
| 134257 பி | 134258 ஏ |
| 134261 ஏ | 134272 ஏ |
| 134272 பி | 134273 ஏ |
| 134277 ஏ | 134286 ஏ |
| 135984 ஏ | |

மட்டக்களப்பில்

# பாஸ் நடைமுறைக்கு எதிராக வழக்கு தொடுக்க இலவச சட்ட உதவி

## சட்டத்தரணி கே. தங்கவடிவேல் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விரைவில் அமுலுக்கு வரவுள்ள பாஸ் நடைமுறை அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனிதஉரிமைகளில் ஒன்றான நடமாடும் சுதந்திரத்தை மீறும் செயலாகும்.

எனவே இந்த நடைமுறைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தொடர பொதுமக்களோ அல்லது பொதுநிறுவனங்களோ முன் வந்தால் வழக்குக்குரிய செலவுகளையும் இலவச சட்ட உதவிகளையும் செய்யமட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தயாராக இருக்கிறது என சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே. தங்கவடிவேல் தெரிவித்துள்ளார்.

பாஸ்நடைமுறை தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியாவதற்கு முன்னர் வழக்குத் தாக்கல் செய்வது பொருத்தமானதாகாது வழக்குத்தாக்கல் செய்ய விரும்புவோர் மட்டு. மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-60)

## நாளை பொதுக் கூட்டம்

(இணுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டம் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் அ. சக்திவேல் தலைமையில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு அனைத்து இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-49)

## இல்ல விளையாட்டு

(அச்சுவேலி)

ஆவரங்கால் சர்வோதய சன சமூக நிலைய முன் பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சர்வோதய விளையாட்டுக் கழக மைதானத்தில் கழகத் தலைவர் அ. சிங்கராசா தலைமையில் பி. ப. 1மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக வலிகிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ. குணசிங்கம் அமைப்பாளர் ரவி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-57)

## மெய்வல்லுநர் போட்டி

(மந்துவில்)

வரணி யாழ். குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 17-ம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.30 மணியளவில், பாடசாலை அதிபர் அ. கனகரட்ணம் தலைமையில் நடைபெற்றது. (க-39)

## (இராசி பலன்)

21.02.2000
திங்கட்கிழமை
(தமிழுக்கு மாசி 09)

துதியை இரவு 8.52 வரை, பூரம் காலை 10.31 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 8.32 முதல் 10.மணி வரை சுபநேரம் பகல் 1.00 முதல் 2.30 வரை.

**மேடம்:** மனச்சஞ்சலம். தொழில் கஸ்டம், தாழ்வுநிலை.

**இடபம்:** விரோதபோக்கு, கடமை தவறல், வேற்றுமை.

**மிதுனம்:** நண்பர் உதவி, தொழில் சிறப்பு. ஆடம்பரசெலவு.

**கடகம்:** குடும்பவிரிசல், மனக்கஸ்டம், பயமிகுதி,

**சிங்கம்:** உயர்ந்தநோக்கு, கல்வியில் சிறப்பு, தியாகம்.

**கன்னி:** வேண்டாத தொல்லை, முகம்சுளித்தல், அலைச்சல்.

**துலாம்:** சுமுகமுடிவு, காரியசித்தி பிரயாசம்.

**விருச்சிகம்:** காதல் சிறப்பு, பொதுப் பணி, உல்லாசம்.

**தனுசு:** கடன்பகை, பெற்றோர் கோபம், வேதனை.

**மகரம்:** பழிவாங்கல், காரியத்தடை, வழிப்பயம்.

**கும்பம்:** நினைத்தது கைகூடல், சுப நிகழ்ச்சி வெற்றி.

**மீனம்:** பாராட்டு, அதிகாரிகள் உதவி, தெய்வதரிசனம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா


யாழ். மத்திய கல்லூரியில் இருபத்தைந்து ஆண்டுகள்
ஆசிரியராகத் தொடர்ந்து சேவையாற்றி
பிரதி அதிபராகப் பதவிஏற்று
வெள்ளி விழாக் காணும்
உயர்திரு
லெப்டினெண்ட் தா. நாகரெத்தினம் B. Sc. Dip in Ed
அவர்களின் சேவைநலத்தைப் பாராட்டி உயர்தர விஞ்ஞான மன்றம் வழங்கும்

வெள்ளி விழா சிறப்பிதழ்



பாராட்டு பாமாலை

இருபத்து ஐந்தாண்டு இணையில்லாச் சேவைதனை
இன்பமுடன் ஆற்றி உயர் தகவுமெய்தி
வருபெற்றி வனப்புயர வரலாற்றின் மத்தியத்தின்
வாழ்வுயர நாளெல்லாம் உழைத்த மேலோன்
குருபக்தி மாணவரில் கூடிவரத் தன்கருமம்
குறைவற்று மேலோங்க நின்ற சீலன்
நிருவுற்றுக் கல்வி நலம் சிறப்புறவே தன்பணியைத்
திறமையுடன் செய்திட்டான் வாழ்க நீடு;

இரசாயன இயல்தன்னில் தனித்துவமாய் தன்புலமை
இசைவாக மாணவர்தம் ஏற்றமோங்க
கரவாது அத்தனையும் எடுத்துமிகக் கருத்துடனே
கற்பித்து அவர்வேறு கதித்து நிற்க
உறவாகித் திறமான கற்பித்தல் உபாயத்தால்
ஊக்குவித்து நோக்கத்தை உயர்த்தி நின்று
திறமான ஆசிரியர் என மற்றோர் புகழ நின்றோன்
சித்திபெறக் கீர்த்தியுடன் வாழ்க நீடு!

கல்லூரிப் பிறமுயற்சி அனைத்துமோங்க(க்) கைகொடுத்து
காப்பாற்றி மத்தியத்தின் மகிமையோங்க
வல்லோனாய் தன்தகைமை அவ்வப்போது வளமாக்கி
வளர்ந்துவரும் வீரருக்கு வாய்ப்புமாக்கி
சொல்லேற்கும் தொனியாலே கட்டளைகள் தொடரவிட்டு
சோர்வகற்றிச் சுறுசுறுப்பைச் சுடர்வாக்கி
எல்லோர்க்கும் இன்னொருவன் என்று நின்றான்
இன்பமுடன் பல்லாண்டு வாழ்க நீடு!

விஞ்ஞான மன்றத்தினர்
யாழ். மத்திய கல்லூரி

கி/88



யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் 2000

23 - 02 - 2000 புதன்கிழமை பி. ப. 2.00 மணிக்கு (புதிய நேரம்) மேற்படி கழகப் பணிமனையில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் வணிகர் கழக வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும் தயவுசெய்து தமது வர்த்தக நிலையங்களை பகல் 12. 00 மணியுடன் பூட்டி தவறாது கூட்டத்திற்கு சமூகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

23. 02. 2000 புதன்கிழமை கடைகள் யாவும் 12. 00 மணியுடன் பூட்டப்படுமாதலால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்,

குறிப்பு:-

உங்கள் வரவுகள் பதியப்பட்டு அவை சமர்ப்பிக்கப் பட வேண்டி இருப்பதால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சகல வர்த்தகர்களையும் தவறாது சமூகமளிக்கும்படி அறிவுறுத்துகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இல, 27, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

(கி-82)

பருத்தித்துறை- செம்பியன்பற்று

# பஸ் போக்குவரத்து சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி, பருத்தித்துறையிலிருந்து செம்பியன்பற்று செல்லும் பஸ் போக்குவரத்துசேவையை வெகுவிரைவில் ஆரம்பிக்குமாறு செம்பியன்பற்று தெற்கு சிக்கனகடன் கூட்டுறவுச் சங்கம். போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர்பௌசிக்குக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

யாழ். மாவட்டத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை தமது சேவையினை மீளவும் ஆரம்பித்து சுமார் ஐந்து வருடங்களாகிவிட்ட பின்னரும்கூட பருத்தித்துறை செம்பியன்பற்று 762 இலக்க வீதிக்கான பஸ் சேவை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

செம்பியன்பற்று பகுதியில் 650 குடும்பங்களைச் சேர்ந்த 2900 மக்கள் வாழ்ந்துவருகின்றனர்.

இப்பகுதியில் சேவையினை மேற்கொள்வதற்கென பருத்தித்துறை பிரதேச தலைவர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பௌசியிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பருத்தித்துறை போக்குவரத்து சபைக்கு ஒரு பஸ் அனுப்பப்பட்டது. எனினும் 762 பாதை சீரின்மை என்பதைக் காரணம் காட்டி குறிப்பிட்ட பஸ்சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்விடயத்தை பருத்தித்துறை பிரதேச தலைவர் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பௌசியின் கவனத்தில் கொண்டுவந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (43)

கோப்பாய் வடக்கில்

## வீடுகள்கட்டி முடிக்கப்பட்ட நிலையிலும் மக்கள் குடியமர முடியாதுள்ளனர்

(அச்சுவேலி)

கோப்பாய் வடக்கு கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 26 குடும்பங்களுக்கு ''ஜனஉதான'' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வீடுகள் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்த நிலையிலும் மக்கள் குடியிருக்க முடியாது அல்லற்பட்டு வருகின்றனர்.

''ஜன உதான'' திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தொடங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்ட இந்த வீடுகள் அரசாங்கத்தின் பண ஒதுக்கீடு உரிய நேரத்தில் கிடைக்காததனால் கூரைத்தகடுகள் பொருத்தப்படாது நீண்டகாலமாக காணப்படுவதால் கூரை மரங்கள் மற்றும் சிலாகைகள் மழைமற்றும் வெயில் போன்றவற்றின் தாக்கத்தினால் சேதமடையும் நிலையில் உள்ளன.

இது விடயம் தொடர்பாக மேலதிகாரிகள் உரிய கவனம் எடுப்பதில்லை என பாவனையாளர் தரப்பில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது. (க-14)

## பாலர் பாடசாலை திறந்துவைப்பு

(புலோலி)

சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆவரங்கால் மத்திய சனசமூகநிலைய பாலர்பாடசாலை வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கத்தால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சனசமூக நிலையத் தலைவர் கே. சிவசோதிதலைமையில் இத்திறப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவிலே ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலய அதிபர் எஸ்.முத்துக்குமாரசாமி, அச்சுவேலி ஈழ மக்கள் ஜன நாயகக்கட்சி அமைப்பாளர்.எஸ்.ரவி, அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் திரு. கே.பேரின்பநாயகம் ஆகியோர் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் என்.மயில்வாகனம் நன்றியுரை வழங்கினார். (ந-52)

பேருந்துப் பிரயாணியிடம்

## தங்கச் சங்கிலி திருடமுயன்றவர் வசமாக மாட்டிக் கொண்டார்.

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியினை அறுக்க முயன்ற திருட்டு நபர் அப் பேருந்தில் பிரயாணம் செய்தவர்களினால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; சம்பவதினம் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் மேற்படி பெண்மணி தனது கடமையை முடித்துக் கொண்டு பிற்பகல் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இத் திருட்டு முயற்சி இடம் பெற்றுள்ளது.

இதனால் திருட்டு நபர் மீது ஆத்திரம் கொண்ட பிரயாணிகள் அவரை தாக்கி நையப் புடைத்ததுடன் திருட்டு முயற்சியிலிருந்து தங்கச் சங்கிலியையும் பாதுகாத்துள்ளனர். (க-14)

## ஆடுகள திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை கூடைப்பந்தாட்ட ஆடுகளத் திறப்புவிழா நேற்று முன் தினம் பிற்பகல் 3மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகயாழ்.கல்வித்திணைக்களப்பொறியியலாளர்கு.சிவபாலன் கலந்துகொண்டார். (க)

மட்டு. மக்களின்

## "பாஸ்" நடைமுறை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துக

### தமிழ்க் கட்சிகளுக்கு கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுலுக்கு வரவுள்ள பிரயாண பாஸ்முறையினால் இம்மாவட்ட மக்கள் எதிர்கொள்ளப் போகும் அசௌகரியங்கள் கஷ்டங்கள் குறித்த ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது பேச்சு நடாத்துமாறு ஐந்து தமிழ்க் கட்சிகளிடமும் மண்முனைப்பற்று பிரதேச அபிவிருத்திச்சபை கோரிக்கை விடுத்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், புளொட் ரெலோ, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளிடமே மேற்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது மட்டக்களப்பில் மக்களுக்கு வழங்கப்படவுள்ள பாஸ் தொடர்பாக பேசி நிவாரணம் பெற்றுத் தருமாறு மேற்படி சபையின் தலைவரும் முன்னாள் பிரதேசசபைத் தலைவர் கோரிக்கை விருடுத்துள்ளார். (க-6)

காஷ்மீரிலிருந்து

## பாகிஸ்தான் வெளியேறாதவரை அந்நாட்டுடன் பேச்சுக்கு இடமில்லை

### பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் பகுதியில் இருந்து பாகிஸ்தான் வெளியேறாதவரை பாகிஸ்தானுடன் சமரசப் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் திட்டவட்டமாக கூறி இருக்கிறார்.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு தாம் தயாரென தெரிவிக்கப்பட்டகூற்றை மறுக்குமுகமாகவே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்—

இந்திய— பாகிஸ்தான் உறவுகளை புதுப்பித்து வலுப்படுத்தவே தாம் லாகூருக்கு பஸ்ஸில் பயணம் மேற்கொண்டதாகவும்.

தமது சமாதான முயற்சிகளை மதிக்காது பாகிஸ்தான் அரசு காஷ்மீர் சண்டையை இந்தியா மீது திணித்து துரோகம் இழைத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மார்ச் 20ஆம் திகதி அமெரிக்க அதிபர் பில்கிளிங்டன் தெற்காசிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொள்ள இருப்பதனாலேயே பாகிஸ்தான் அரசு இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த விருப்பம் தெரிவித்திருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (க-9)

## உலக வலம்

### ரஷ்ய ஹெலி மீது செச்சின் போராளிகள் தாக்குதல்; 15 இராணுவ வீரர் பலி

(குரொஷ்னி)

ரஷ்யாவுக்குச்சொந்தமான ஹெலி ஒன்றை செச்சினியப் போராளிகள் தாக்கியதில் 15 ரஷ்ய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்ய முன்னாள் ஆட்சியாளர் ஸ்ராலின், 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி செச்சினியர்களை நாடு கடத்திய நாளை நினைவு கூரும் வகையிலேயே இத் தாக்குதலைசெச்சினிய தீவிரவாதிகள் நடாத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

23 ஆம் திகதி நெருங்க இன்னமும் அவர்களது தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்ற வகையில் செச்சினியாவில் உள்ள ரஷ்ய துருப்புக்கள் அதிக உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

ரஷ்யத் துருப்புக்கள் நேற்று முதல் செச்சினிய பொதுமக்களின் நடமாட்டத்தை மட்டுப்படுத்தி இருப்பதாகவும் தெரிய வருகிறது. (க-9)

# மகாராஷ்டிர மாநில ரயில் விபத்தில் 17 பேர் உடல் கருகி மரணமாகினர்

(புதுடில்லி)

மகாராஷ்டிர மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பாரிய ரயில் தீவிபத்தில் 16 பேர் உடல் கருகி பரிதாப மரணத்தை தழுவிக் கொண்டனர்.

பல நூற்றுக்கணக்கான பயணிகளை ஏற்றிக் கொண்டு பஞ்சாப் நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலில் தீப்பிடித்ததில் அதில் இருந்த 16 பேர் மரணமானதாகவும், 23 பேர் கடுங் காயங்களிற்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலைமையை சடுதியில் புரிந்து கொண்ட ரயிலில் பயணம் செய்த புதுடில்லி பல்கலைக்கழக மாணவர்கள் சிலர், தீப்பிடித்த பெட்டிகளை அகற்றி மேலும் தீ பரவாது தடுத்ததுடன் பல உயிர்களையும் காப்பாற்றியுள்ளனர்.

எனினும் நடந்தது விபத்தா அல்லது திட்டமிட்ட சதி நடவடிக்கையா என்பதை ஆராயும் வகையில் ரயில்வே பாதுகாப்பு ஆணையகம் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ரயில் தீ விபத்தில் மரணமானவர்களது குடும்பங்களுக்கு தலா 4 இலட்சம் கருணைத் தொகை கொடுப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது காயமடைந்தவர்களுக்கு உரிய வகையில் சிகிச்சை மேற்கொள்ளப்படுவது குறித்து தீவிரகவனம் செலுத்திவருகிறது. (க-9)

## பொலிஸார் நக்ஸலைட் மோதல்

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் விசாகப்பட்டின மாவட்டத்தில் பொலிஸாருக்கும் நக்ஸலைட்டுக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 7 பொலிஸாரும் ஒரு நக்ஸலைட் தலைவரும் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் வேறு 8 பேர்களும் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் உயிரிழந்த பொலிஸாரின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா கருணைத் தொகையர்க வழங்குவதற்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

ஐரிஷ் இராணுவத்தினர்

## ஒரு புறத்தில் சமாதானம் பேசிக்கொண்டு மறுபுறத்தில் ஆயுதங்கள் கடத்துகின்றனர்

### லண்டன் சண்டேரைம்ஸ் தெரிவிப்பு

(லண்டன்)

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினர் ஒரு புறத்தில் சமாதானம் பேசிக் கொண்டு மறுபுறத்தில் ஆயுதங்களைக் கடத்தினர் என இலண்டனில் இருந்து வெளியாகும் சண்டேரைம்ஸ் பத்திரிகை குற்றம் சாட்டி உள்ளது.

சென்ற ஆண்டு 20 ஆயிரம் தொன் கனரக ஆயுதங்கள், துப்பாக்கிகள் என்பவற்றை கப்பல் மூலம் வடஅயர்லாந்துக்கும், அயர்லாந்துக்கும் இவர்கள் கடத்தி இருப்பதகாவும்,

இது தொடர்பான விசாரணைகளில் ஐரிஷ் பொலிஸார் மற்றும் அமெரிக்க சமஷ்டி புலனாய்வு பணியகம் ஆகியவை ஈடுபட்டிருப்பதாகவும் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதே வேளை—

ஆயுதக்களைவு தொடர்பான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடப் போவதில்லை என்றும் சர்வதேச ஆயுத கண்காணிப்புக் குழுவுடனான தொடர்பை துண்டிக்க போவதாகவும் ஐரிஷ் குடியரசு இராணுவம் கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர்

# இசைக்கல்லூரி மாணவர்போராட்டம் நாளையுடன் 3ஆம் மாதம் நிறைவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை கிழக்கு பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டும்மென்று கோரி மாணவர்கள் நடாத்தி வரும் பகிஷ்கரிப்புப் போராட்டம் நாளையுடன் மூன்றுமாதம் பூர்த்தியடைந்தும் இப் போராட்டம் வெற்றியளிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த வருடம் நவம்பர் 24 ஆம் திகதி முதல் மேற்படி கோரிக்கையை வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடாத்திவந்தது இங்கு சுட்டிக் காட்டத் தக்கது.

இக் கல்லூரியில் கற்று வெளியேறும் மாணவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படாததை யடுத்தே மாணவர்கள் மேற்படி கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் தமது பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடாத்தி வருகின்றனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு முன்னாள் இந்துகலாச்சார அமைச்சர் செ. இராசதுரை இக் கல்லூரியை ஆரம்பித்து வைத்தமை ஏற்கனவே தெரிந்ததே. (க-60)

வடமராட்சியில்

## குறுங்கால தொழிற்றிறன் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(புலோலி)

வடமராட்சி வலய முறைசாரக் கல்விப்பிரிவினால் நடாத்தப்படவுள்ள 2000 ம் ஆண்டிற்கான குறுங்கால பயிற்சி நெறிகளுக்கும், தொழிற்திறன் பயிற்சி நெறிகளுக்குமான போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் வடமராட்சி வலய முறைசாராக்கல்விப் பிரிவினால் கோரப்பட்டுள்ளன.

தொழிற்திறன் பயிற்சிநெறி போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 23 ம் திகதிவரையும், குறுங்காலப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28 ஆம் திகதிவரையும் ஏற்றுக் கொள்ளப்படுமென்றும் விண்ணப்பங்கள்யாவும் வடமராட்சி வலயமுறைசாரக் கல்விப்பிரிவுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் முறைசாராக்கல்விப்பிரிவு பிரதிக் கல்விப்பணிப்பாளர். திரு. பீ. வேணுகோபால் தெரிவித்துள்ளார். (க-52)

## கட்டாக் காலி நாய்கள் அழிப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப்பகுதியில் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறைப் பிரதேசசபைத்தலைவர் மேற்கொண்டுள்ளார். (க-52)

மட்டு. இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில்

## நீர்ப்பாசன திட்ட அமுலாக்கத்தில் பிரதி அமைச்சர் ஈடுபடுகிறார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியில் நீர்பாசனத் திட்டத்தை அமுல்படுத்தும் முயற்சியில் தபால் தொடர்புகள் பிரதி அமைச்சர் எம். எல்.எ. எம். ஹிஸ்புல்லா ஈடுபட்டு வருகிறார்.

இதுவிடயம் தொடர்பாக பிரதி அமைச்சர் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவிடமும் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 4 ஆண்டுத்திட்டமான இத் திட்டத்தை நிறைவேற்ற உலகவங்கி 32 மில்லியன் டொலர்களை கடன் உதவியாக வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 29 குளங்கள் தெரிவு செய்யப்பட்டு, இவ் வருடம் 14 குளங்கள் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும் படைத்தரப்பு இதற்கான அனுமதியை வழங்கவில்லை.

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா இதுவிடயம் தொடர்பாக பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்தை, கேர்ணல் சக்கி, கிழக்கு மாகாண இராணுவத் தளபதி சோமபால ஆகியோருடன்பேச்சு நடாத்தி வருகின்றார். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-60)

## குடும்பஸ்தர் தற்கொலை

(அச்சுவேலி)

கசிப்புடன் சேர்த்து நஞ்சருந்திய குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அண்மையில் புத்தூர் வடக்கில் நடந்துள்ளது.

ஆ. கிட்ணராசா என்ற 5 பிள்ளைகளின் தந்தையே மேற்படி தற்கொலை செய்து கொண்டவராவார். (க-57)

## சிறுதானியம் அறுவடை

(நெடுந்தீவு)

இவ்வாண்டு பயிரிடப்பட்ட சாமை, வரகு, குரக்கன் போன்ற சிறுதானியங்கள் தற்சமயம் அறுவடை செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

வழமைக்காலங்களைவிட காலநிலை ஒவ்வாமை இவ்வாண்டு இருந்தபோதிலும் விளைச்சலின் அளவு அதிகரித்துள்ளது குறிப்பிட்டவேண்டிய அம்சமாகும். (க-82)

வட அமெரிக்காவில்ரெக்ஸாஸ்நகரில்

## மரண தண்டனைவிதிக்கப்பட்ட கைதிக்கு மன்னிப்பு வழங்க திருத்தந்தை கோரிக்கை

(வோஷிங்டன்)

வட அமெரிக்காவின் ரெக்ஸாஸ் நகரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஓடல் பர்னஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட தண்டனையில் இருந்து மன்னிப்பு வழங்குமாறு, திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், ரெக்ஸாஸ் மாநில ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

31 வயதான ஓடல் பர்னஸ் என்ற மேற்படி நபருக்கு, தனது காதலியைக் கொலை செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்து நீதிமன்றின் முன் நிறுத்தியதன் பேரிலேயே மரணதண்டனை வழங்குவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வரும் மார்ச்மாதம் 31 ஆம் திகதி விஷ ஊசி ஏற்றி இவருக்கான மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான நாளாக நிர்ணயிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

பாஸ்கா மாவட்டத்தில்

# சக்திவாய்ந்த நிலக்கண்ணியில் அதிகாரி உட்பட 24 பொலிஸ் பலி

(புதுடில்லி)

மத்திய பிரதேச பாஸ்கா மாவட்டத்தில் வக்கூடன்வாடி என்ற இடத்தில் சக்திவாய்ந்த நிலக்கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் சிரேஷ்ட பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் உட்பட 24 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பயங்கரவாதிகள் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து பொலிஸ் உயர் அதிகாரியை உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்ட போதே மேற்படி தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

தடைசெய்யப்பட்ட இயக்க தீவிரவாதிகளே இந்த நிலக் கண்ணிவெடியைப் புதைத்து வைத்திருக்கலாம் என பொலிஸார் தரப்பில் சந்தேகிக்கப்படுகிறது.

எனினும் அப்பகுதியில் தேடுதல் நடாத்தி வன்முறைக்கு காரணமானவர்களைக் கண்டுபிடிக்கும் நோக்கில் 300 இக்கும் அதிகமான கூடுதல் பாதுகாப்பு அணியினரை பாஸ்கா மாவட்டத்திற்கு உடனடியாக அனுப்பி வைத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

## இஸ்லாமிய ஆயுத·குழுக்களின்·தாக்குதலில் 16 பொதுமக்கள் பலியாகினர்

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவில் இஸ்லாமிய ஆயுதக் குழுக்களின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் 16 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 12 பொதுமக்கள் கடும் காயங்களுக்கு உள்ளாகினர்.

ஹேமிஸ் மேலியானா நகருக்கண்மையில் வான் ஒன்றில் வந்து கொண்டிருந்த பயணிகளை வழிமறித்த இராணுவ உடையணிந்த கிளர்சியாளர்கள் 2 மணி நேரமாக மேற்கெண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

கடந்த ஒரு கிழமையில் இவ்வாறான தாக்குதல்களில் 40 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இத்தகைய கொடூரங்களை புரிபவர்கள் அல்ஜீரிய இஸ்லாமிய ஆயுதக் குழுவினரே எனவும் உள்ளூர் செய்திப் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

இதேவேளை–

மேற்படி கிளர்ச்சிக் குழுவினர்க்கு அல்ஜீரிய ஜனாதிபதி அப்துல்அஸீஸ் பொது மன்னிப்பு வழங்க முன்வந்த போதிலும் அவர்கள் அதனை ஏற்க மறுத்துவிட்டனர் என தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# பொதுமக்களின்பணயக்கைதிகளாக 60 இற்கும் மேற்பட்ட பொலிசார்

(வோஷிங்டன்)

அறுபதிற்கும் மேற்பட்ட பொலிஸாரை பொதுமக்கள் பணயக்கைதிகளாக பிடித்து வைத்துள்ள சுவையான சம்பவம் வடஅமெரிக்காவின் மெக்சிக்கோ நகரில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது;

மெக்சிக்கோ நகரப் பாடசாலை ஒன்றின், பல ஆசிரியர்களை மாணவர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில், பொலிஸார் வெளியேற்றியதைத்தொடர்ந்துஎதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக மாணவர்கள் மேற்படி பாடசாலையை கடந்த ஜனவரி முதல் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இதனை முறியடிக்கும் முயற்சியில் அண்மையில் பொலிஸார் ஈடுபட்டபோது ஏற்பட்ட வன்முறைகளில் 58 மாணவர்கள் படுகாயமடைந்ததோடு, 150 மாணவர்களை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாணவர்கள் 150 பேரையும் விடுவிக்கும் முயற்சியாகவே பொதுமக்கள் மேற்படி 60 பொலிஸாரையும் தடுத்து வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பாதி உடை அணிந்த நிலையில் மேற்படி பொலிஸாரை பொதுமக்கள் நகரமையத்தில் அமைந்துள்ள சதுக்கம் ஒன்றில் கட்டிவைத்துள்ளனர். (க-9)

## பயங்கரவாத நாட்டிற்கு சென்ற முதல் அமெரிக்க பெண் உயர் அதிகாரி

(வோஷிங்டன்)

அமெரிக்க அரசின் வெளியுறவுச் செயலர் திருமதி மெடலின் அல்பிரைட் அல்பேர்னியாவில் திரானாவுக்கு திடீர் பயணம் மேற்கொண்டார்.

இதனையொட்டி அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அமெரிக்க உள்துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அல்பேர்னியாவில் சுமார் 7 மணிநேரம் தங்கியிருந்து அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக மெடலின் அல்பிரைட் ஆராய்வார் எனத் தெரிய வருகிறது.

இதேவேளை மிகவும் கொடூரமான நாடென உலகத்தவர்களால் வர்ணிக்கப்படும் அல்பேர்னியாவுக்கு செல்லும் முதல் அமெரிக்க உயர் அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

### உலக வலம்

## இன்று வாக்குப் பதிவு

(புதுடில்லி)

பீஹார், ஒரிஸாஹரியானா, மணிப்பூர் மாநிலங்களின் இறுதிக்கட்ட தேர்தல் வாக்குப் பதிவுகள் இன்று 22 ஆம் திகதி நடைபெறுகின்றன.

பீஹாரில் 108 தொகுதிகளிலும் ஒரிஸாவில் 75 தொதிகளிலும் ஹரியானாவில் 1090 தொகுதிகளிலும் மணிப்பூரில் 32 தொகுதிகளிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெறும். (க-9)

## அமெரிக்காவிற்கு எதிராக வெளியிட்ட சீனாவின் வெள்ளை அறிக்கை

(பீஜிங்)

சீனநாடு அதன் மனித உரிமை தொடர்பாக விளக்கமாக எடுத்துக் கூறும் வகையில் வெள்ளை அறிக்கை ஒன்றினை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

சீனாவின் 50 ஆண்டுகால மனித உரிமைகள் முன்னேற்றம்'' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளஅவ்வெள்ளை அறிக்கையில்—

120 கோடி சீன மக்கள் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றை பூரணமான முறையில் அனுபவிக்கின்றனர். பட்டினி, குளிர், அறியாமை ஆகியவற்றில் இருந்து இவர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றார்கள். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வர்த்தக ஸ்தாபனத்தில் சீனா சேர்வதற்கு எடுத்துவரும் முயற்சிகளை முறியடிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கக் காங்கிரஸ் மற்றும் உள்ளூர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு பதிலளிக்கும் முகமாகவே இவ் வெள்ளையறிக்கைவெளியிடப்பட்டிருக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் [illegible] நூலகம்
மாநகர [illegible] மன்றம்
யாழ்ப்பாணம்

உள்ளம்இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம்என்னும் செருக்கு
- குறள்

# வலம்புரி

## சிறுவர் உரிமைகள்

ஐக்கிய நாடுகள் சபை' யின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 இல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1991 இல் இலங்கை அரசு அதனை உறுதி செய்தது. இச் சமவாயம் சிறுவர்கள் சிறப்பான மதிப்புக் குரியவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டு அவர்களுக்குரிய நன்மைகள், அவர்கள் பெற வேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை வரை முறைப்படுத்துகிறது.

சமவாயத்தின் உறுப்புரைகள் சிலவற்றை ஈண்டு சிந்தித்தல் இளந்தலை முறையினர்க்கு ஆரோக்கியமாயுமமையும். பதினெட்டு வயதுக்கு உட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியராகக் கணிக்கப்படுவர். சிறுவர்களை எல்லா வகையான பாகுபாடுகளிலிருந்தும் காப்பதும், அவர்களின் உரிமைகளைப் பரப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமையாகும்.

குறித்த உரிமைகளை நிதர்சனமாக்குவதற்கு அரசு தன்னாலான அனைத்தையும் செய்தல் வேண்டும். குழந்தைக்கு அதன் பரிணாம வளர்ச்சிக்கு இசைவான முறையில் வழிகாட்டும் பொறுப்பு பெற்றோருக்கும் குடும்ப வட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உண்டென்பதை அரசாங்கப் மதித்தல் வேண்டும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர்வாழும் உரிமை பிறப்போடு கூடிய தொன்றென்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் உய்வையும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்தும் கடப்பாடு அரசாங்கத்தினுடையதும் தனது கருத்தைத் தெரிவிக்கும் சுதந்திரம் பிள்ளைக்கு உண்டு பிள்ளையைப் பாதிக்கும் எந்தவிடயத்திலும் அதன் கருத்தைக் கவனத்திற் கொள்ளுதல் அவசியம்-

பிறரின் உரிமைகளை மீறாவண்ணம் தனது எண்ணங்களைத் தங்கு தடையின்றி வெளியிடவும் தகவல்கள் பெறவும் தன்கருத்தை அல்லது தகவலைத் தெரியப்படுத்தவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமையுண்டு

உளமற்றும்உடல் ஊனமுற்ற பிள்ளைகள் கண்ணியத்துடன் வாழ்வதற்கும் முடிந்த வரை சிறப்பான முறையில் தம் சொந்தக் காலில் நிற்கவும். சமுதாயத்துடன் இணைந்து கொள்ளவும். சிறார்கள் கடமையிற் கண்ணியமாவார்

- அன்புடன் ஆசிரியர்

---

வடமராட்சி பிரதேச செயலகம்

# கட்டுவதற்கு 15 இலட்சம் தேவை

# டக்ளஸிற்கு அவசர மகஜர்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்திற்கென தனியான கட்டடம் கிடையாது. 175 உத்தியோகத்தர்கள் கடமை புரியும் மேற்படி செயலகமானது வசதிகள் குறைந்த தனியார் கட்டடத்திலேயே இயங்குகிறது. புதிய காணி கொள்வனவு செய்வதற்கு 15 இலட்சம் ரூபாவை உடனடியாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வடமராட்சிப் பிரதேச அபிவிருத்திக் குழு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்டக்ளஸ் தேவானந்தாவிற்கு அனுப்பிய அவசர மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமராட்சி வடக்கு பிரதே. செயலக பிரிவில் சுமார் 12 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன என்றும் அங்கு தனியான பிரதேச செயலகம் இல்லாமை முக்கிய குறைபாடாகும்.

அது மட்டுமன்றி மேற்படி செயலகமானது இதுவரையில் பருத்தித்துறை பணிடிப் போவிற்கு சொந்தமாகவுள்ள கட்டடத்திலேயே தற்காலிகமாக செயற்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-48)

## உடைந்த நிலையில் மதகு

(யாழ்ப்பாணம்)

மாவடி வீதியில் அமைந்துள்ள மதகு உடைந்த நிலையில் இருப்பதால் கழிவு நீர் வீதியெங்கும் பரவி சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாநகரசபை உறுப்பினர் செ. விஜயரட்ணம் யாழ். மாநகரசபை ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். (க-1)

## பல் வைத்தியர் பற்றாக்குறை நீங்க 90 வைத்தியர்கள் நியமனம்

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகள்மற்றும்மருத்துவ சிகிச்சை நிலையங்களில் நிலவும் பல் வைத்தியர் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு புதிதாக 90பல்வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 558 பல்வைத்தியர்கள் சேவையில் ஈடுபடுத்தபட்டுள்ள போதிலும் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் பற்சிகிச்சை பெறுவதற்கு மிகவும் கஸ்ரப்படும் நிலைமையை கருத்தில் கொண்டே மேற்படி 90பல் வைத்தியர் நியமனங்கள் இடம்பெற்றிருப்பதாகதெரிய வருகிறது.

இதேவேளை வடக்கு—கிழக்கு வடமத்திய மாகாணங்களிலேயே புதிய பல் வைத்தியர்களில் பெரும்பாலானவர்கள் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது. (க-9)

## இளம் சந்ததி தமிழை கற்பதுபோல ஆங்கிலத்திலும் கவனமெடுக்க வேண்டும்

(அச்சுவேலி)

நமது இளம் சந்ததியினர் தாய் மொழியாகிய தமிழ் மொழியை எந்த அளவிற்கு ஆழமாகச் சிந்தித்துக் கற்றுக், கொள்கிறார்களோ அதே அளவிற்கு ஆழமாகச் சிந்தித்து மன உறுதியுடன் ஆங்கில மொழியையும் கற்றுக் கொள்வார்களேயானால் ஆங்கில மொழியில் பாண்டித்தியம்பெறுவது திண்ணம்.

நேற்று முன்தினம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் அச்சுவேலியில் ஆரம்பித்துவைக்கப்பட்ட ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்பில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவி அதிகாரி எஸ். கோகுலராஜா தனது உரையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இளைஞர் கழக பிரதேச சம்மேளன தலைவர் க.அருமைதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் உரையாற்றுகையில், அந்நியர் வருகையினால் நமது நாட்டில் ஆங்கில மொழி பரவிக் கொண்டதனால் இன்று வரைக்கும் பலர் அதை ஓர் அந்நிய மொழியாகவே கருதுகின்றார்கள். இந்நிலை இளஞ்சந்ததியினரிடையேயும் காணப்படுவது அவர்களின் ஆங்கில மொழி கற்கும் திறனை குறைத்துவிடுகிறது.

இந்தநிலை முற்றுமுழுதாக மாறவேண்டுமாயின் நாம் ஆங்கிலத்தில் உலகளாவிய பயன்பாட்டை பூரணமாக அறிந்து கொள்ள வேண்டும்.

கிணற்றுத் தவளைகளைப் போல் நமது நாட்டுக்குள் இருந்து விட்டு வெளியே வரும் போது தான் பலர் ஆங்கிலத்தின் அருமையும் பெருமையும் அறிந்து கொள்கிறார்கள். இத்தகைய சிக்கல்களை தவிர்த்துக்கொள்ள வேண்டுமாயின் இளஞ் சந்ததியினர் மாணவப் பருவத்திலேயே மனவைராக்கியத்துடனும் தளராத மன உறுதியுடனும் ஆங்கிலத்தைக் கற்றுக கொள்ள வேண்டும். இதுதான் மாணவர்களுக்குரிய நல்ல சந்தர்ப்பமும் என்றார். [க-14]

## பாடசாலையில் சைக்கிள் திருடியவர் மாணவரிடம் மாட்டிக் கொண்டார்

பாடசாலை இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சைக்கிள்களைத்திருடியஇளைஞன் ஒருவன் மாணவர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

இச்சம்பவம் மீசாலை புத்தூர்ச் சந்தி வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

மேற்படி இளைஞன் திருடிய சைக்கிள்களை பாதுகாப்பாக மறைவில் வைத்துவிட்டு மீண்டும் திருட்டில் ஈடுபட்ட சமயம் அகப்பட்டுக் கொண்டார். (க-21)

## பாலம் சேதம்

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் தூதரகத்தினால் [யூ.என்.எச்.சி.ஆர்] 6 இலட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்ட நெடுந்தீவு மாவிலித்துறைப் படகுகள் அணைக்கும் பாலம் முற்றாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றைய சிந்தனை

''ஒருவனின் துடுக்குத் தனமான பேச்சு அவனது அறிவைத்தான் காட்டும். அது அவனது பண்பாட்டைக் காட்டாது''


- ஓர் அறிஞர்

---

# ஸ்ரீ ராகவேந்திரரின் பிருந்தாவனப்பிரவேசம்

ஸ்வாமிகள் கும்பகோணத்தில் அமைந்துள்ள பீடத்தை விட்டு வடபகுதி நோக்கி யாத்திரை செய்யும் பொழுது சுவாமிகளின் முன் புவனேஸ்வரிஅம்மன்தோன்றி ராகவேந்திரா நீ இருக்கும் இடம் எல்லாம் செழித்து துன்பங்கள் அகற்று. காய்ந்த பூமி வளம் கொழிக்கும். ஆதலால் உனது பிருந்தாவனத்தை நான் குடி கொண்டிருக்கும் மாஞ்சாலம் கிராமத்தில் அமர்த்து வாயாக என கட்டளையிட்டார். அதற்கிணங்க அவ்வேளையில் மன்னராக இருந்த நவாப் மசூத்காளிடம் அனுமதி பெற்று கிருதயுகத்தில் பிரஹலாதனாக இருந்து, யாகம் செய்த பீடத்தில் சாலி வாகன சுகம் 1593ஆம் ஆண்டு (கி.பி 1671) விரோதி கிருது வருடம், ஸ்ராவன மாதம், கிருஷ்ண பக்ஷசம் த்விதியை வியாழன் அதிகாலை பக்தர்கள் துங்க பத்திராவில் நீராடி சுவாமிகளின் முன் மண்டியிட்டு அமர்ந்து இருக்க சுவாமிகள் கூறலானார்.

பக்தர்களே அனைவரையும் பார்க்கும் போது மிக மகிழ்ச்சியுடைய வராகின்றேன். சோதிடர்கள் கூறியது போன்று 100 வருடங்கள் என்சரீரம் உங்களுடன் இருந்தது. 300 வருடங்களின் பின் என் கிரந்தம் பிரபல்யமாகும். நான் 700 வருடங்கள் பிருந்தா வனஸ்த்தராக இருந்து நாடிவருபவர்க்கு இடர்கள் இன்னல்களை போக்கியருளுவேன் என்று கூறினார். தொடர்ந்துமூலராமருக்கு தீப ஆராதனை முடித்து பிரசாதம் வழங்கிய பின் தனது வீணையுடன்



பிருந்தாவனம் அமைந்த இடத்தின் தெற்கு புற வாசல் வழியாக மிகுந்த ஒளிப்பிரகாசத்துடன் உட்சென்று வலது கையில் துளசி மாலையை எடுத்து சர்வோத்தமனை தியானித்து கொண்டிருந்தபோது மாலை நழுவி விழுந்தது. ஏற்கனவே கூறியிருந்தது போல் பக்தர்கள் சாளக் கிராமங்களை அடுக்கி அவரது சரீரம் இருந்த பிருந்தாவனத்தை மூடினார்கள். பக்தர்கள் வானைப் பிளக்கும் வண்ணம் குருவே ராகவேந்திராஎன அலறினார்கள்.

அப்போது 'யாரையும் நான் விட்டுப்பிரியவில்லை உங்கள் சேமத்திற்காக 700 வருடங்கள் ஜீவ ஆத்மாவாக இருப்பேன்' என்று அசரீரீ கேட்டது. இன்றும் மூல பிருந்தாவனத்தில் ராமர் பூஜை நடைபெறும் போது இரண்டு குருவிகள் வந்து பிருந்தாவனத்தின் மதில்மேல் இருந்து பூஜை முடிந்தவுடன் அகன்று விடும் அதிசயம் நடைபெறுகின்றது. மந்திராலயத்தின் அருகில் பாயும் துங்கபத்திரா நதியில் நீராடினால் சகல பாவங்களும், நோய்களும் தீரும் என்பது எனது அனுபவ உண்மை.

ஸ்ரீ ராகவேந்திர
அடியான் சிவா

இலங்கையில் யாழ்ப்பாணத்து நல்லூரில் 159 ஆம் இலக்கத்தில் ஸ்வாமிகளின் மிருத்திகா ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கும் பல அற்புதங்கள் நிகழ்கின்றன. மூல பிருந்தாவனத்திற்குச் செல்ல முடியாதவர்கள் இங்கு சுவாமிகளின் தரிசனத்தை பெற்று உய்யும்படி வேண்டுகிறேன்.

இன்று த்விதியை திதி ஒவ்வொருமாதமும் பூரணை வந்து இரண்டாவது நாள் மேற்படி மிருத்திகாவில் அபிஷேக ஆராதனைபஜனை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி

# உலகவங்கித் திட்ட நிதி 48இலட்சம் செலவில் பழைய இடத்தில் அமையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற புதிய கட்டடத் தொகுதி ஒன்றை அமைப்பதற்கு உலக வங்கித் திட்டத்தின் கீழ் சுமார் 48 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றவட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு மாடிகளைக் கொண்ட இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீண்டும் பழைய இடத்திலேயே அமையவுள்ளது.

இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதிகளில் மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் என்பன இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

யாழ். மாவட்ட நீதிமன்றத்தின் கோரிக்கையை அடுத்து பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதியைக் கட்டுவதற்கான நிதியை உலகவங்கித் திட்டத்தின் மூலம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை — கிழக்கு மாகாணத்திலும் திருமலையில் புதிதாக நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமையவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

யாழ். மேல் நீதிமன்றம்

## மார்ச் முதல் வாரத்தில் இயங்கும் நீதிபதியாக கே.பி.எஸ். வரதராசா நியமனம்

(யாழ்ப்பாணம்)

மார்ச் மாதம் முதல் வாரத்தில் தற்போது மேல் நீதிமன்றக் காரியாலயம் இயங்கும் கட்டடத்தில் மேல் நீதிமன்றம் இயங்கவுள்ளது என்று யாழ் மாவட்ட நீதிபதி இ. த.விக்கினராஜா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மேல் நீதிமன்றம் இயங்கவுள்ளதால் தற்போதைய சிறைச்சாலைக் கட்டடம் போதிய இடவசதியைக் கொண்டிராமையால் அதனை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதியாக கே. பி. எஸ். வரதராசா அடுத்தமாத முதல் வாரத்தில் பதவி ஏற்பார் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## மத்திய ஆய்வாளன் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விஞ்ஞானமன்றவிஞ்ஞானதின விழாவும் மத்திய ஆய்வாளன் சஞ்சிகை வெளியீடும் இன்றுகாலை 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி றெஜி சொலமன் கலந்து கொண்டு க. பொ. த. உயர் தரத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குத் தங்கப் பதக்கங்களை அணிவிப்பார். (ந 7)

### யாழ். மத்திய...

புதைகுழிகளில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் தடயப் பொருட்கள் இன்று முதல் ஐந்து நாட்களுக்கு யாழ். மத்திய கல்லூரியில் பார்வைக்கு வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

### யாழ்...

இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவ உயர் அதிகாரி ஒருவர் லீவில் சென்றுள்ளமையாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் நாளை மறுதினம் அவர் இங்கு வந்தவுடன் உடனடியாக தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

### புலிகள்...

ஆனையிறவு ஆட்சியாளர்களின் இராணுவ முகாமாகவே இருந்து வந்துள்ளது, இதன் அடிப்படையில் ஆனையிறவுப் பிரதேசம் எந்தவகையிலும் இழக்கப்பட முடியாத ஒரு பிரதேசமாகும்.

இராணுவம் வன்னியில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளினால் பின்னடைவுகளைச் சந்தித்தது உண்மைதான். ஆயினும் எமது வன்னிப் பின்னடைவுக்கு ஈடாக நாம் ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த இழப்புக்களையும் உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளோம்.

எனவே எமது நிலைப்பாட்டின்படி விடுதலைப்புலிகளின் எந்தவொரு தாக்குதல்களையும் முறியடிக்கும் திறன்எமது இராணுவத்தினரிடம் உண்டு என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)


ஸ்ரீ செல்வா
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
பிரபுதேவா, ரோஜா
நடித்த
ஏழையின் சிரிப்பில்
(புதிய வெளியீடு)
நேரடி CD
10.30-2.30 (ப. நே.)
மகளிருக்கு இடமுண்டு
(00115)


## வவுனியா சோதனைச் சாவடியில் காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்படும்

### வர். சங்கத்திடம் இராணுவம் உறுதி

[வவுனியா]

வவுனியா ஈரப்பெரிய குளம் சோதனைச்சாவடியில் ஒரு நாளுக்கு 75 முதல் 100 வரையான லொறிகளை சோதனையிட்டு அனுப்புவதற்கு இராணுவப் பிரிகேடியர்களான திஸ்ஸ ஜெயவர்த்தன, சுனில் தென்னக்கோன் ஆகியோர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

நேற்று நடந்த வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், மற்றும் லொறிச் சாரதிகள் உதவியாளர்கள் ஆகியோருடனான சந்திப்பின் போதே இராணுவ அதிகாரிகள் மேற்படி ஒப்புதலை அளித்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து தினமும் கொழும்புக்குக் காலை 6-00 மணிமுதல் லொறிகள் அனுமதிக்கப்படுவதற்கும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் பாதுகாப்புப் படையினரிடம் லொறிச் சாரதிகளும் உதவியாளர்களும் இச்சந்திப்பின் போது எடுத்துக்கூறினார்கள்.

அதிக தொழிலாளர்களை ஈடுபடுத்தி சோதனை நடவடிக்கைகளை துரிதமாக்குவதாகவும் வர்த்தகர் சங்கத்தின் ஒத்துழைப்பு தமக்குத் தேவை என்றும் இராணுவ அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். [வ-103]

குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பான

## கொலையாளிகளை கைதுசெய்ய பொதுமக்கள் உதவவேண்டும்

### பொலிஸார் வேண்டுகோள்

படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் குமார் பொன்னம்பலத்தை கொலை செய்தவர்கள் என இருவர் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலையாளியையும் அவருக்கு உதவியாக இருந்து வந்தவரையுமே இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்களின் படங்கள் பத்திரிகையில் வெளியாகும் எனவும் அவர்களைக் கைதுசெய்ய பொதுமக்கள் உதவவேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

குமார் பொன்னம்பலம் சுடப்பட்டபோது உடன் இருந்தவருக்கு 25 வயதிருக்கும் என்றும் — இவர் பற்றித் தெரிந்தவர்கள் தமக்கு அறியத்தருமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (வ-4)

### பெற்றோல் தட்டுப்பாடு

யாழ்ப்பாணத்தில் எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பெற்றோல் பாவனையாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதோடு தனியார் எரிபொருள் நிலையங்களில் அதிகவிலை கொடுத்து பெற்றோல்வாங்க வேண்டியுள்ளதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

## அமைச்சர் அலவி தலைமையில் 50 தொ-பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்திப்பர்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாகவும் தொழிற் பிணக்குகள் குறித்தும் ஐம்பது தொழிற் சங்க பிரதிநிதிகள் இன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசவுள்ளார்கள்.

அமைச்சர் அலவிமௌலானா தலைமையில் இத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும், தொழிலாளர்கள் மத்தியில் ஏற்படும் தொழிற் பிணக்குகள் குறித்தும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாகவும் அரசுக்கு ஆதரவு வழங்குவதெனவும் சந்திரிகாவிடம் வலியுறுத்திக் கூறவுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது, [வ]

### தீப்பெட்டி, கற்பூரம் எடுத்துச் செல்லத் தடை

[ஊர்காவற்றுறை]

கடற்படையினர் தீவகத்திற்கு தீப்பெட்டி, கற்பூரம் ஆகிய பொருட்களை ஒரு டசினிற்குமேல் கொண்டு செல்லத்தடை விதித்துள்ளதுடன் சிறிய பற்றறிகளைக் கொண்டுசெல்ல முற்றாகத் தடைவிதித்துள்ளனர்.

இதற்கு முன் தீப்பெட்டி கற்பூரம் போன்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் 'எவரெடி' பற்றறி ஒரு சோடி எடுத்துச்செல்வதற்கும் எதுவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-75)

### மாணவர்களுக்கு

இடம் பெயர்ந்து கடற்றொழிலுக்குச் செல்ல முடியாதுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூபா எட்டு இலட்சம் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பியின் யாழ், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. வி, குகேந்திரன் தெரிவித்தார்.

### பார்ப்பதற்கு...

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் படையினரை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியமைக்கு ஈ. பி. நாணயக்கார நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பாதுகாப்பில் இருக்கும் படை வீரர்களின் உறவினர்கள் சாதாரண விவசாயிகளாக இருப்பதால் அவர்கள் சார்பில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கே தமிழ் தெரிந்த ஒருவரையும் சங்கத் தலைவரையும் அனுமதிக்குமாறு தாம் கோரியுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இக் கோரிக்கையை அரசு செவிமடுத்து தமக்கு அனுமதி வழங்குமென்று நம்பிக்கை தெரிவித்தார் (வ-7)

### பொதுசன...

குருநாகல் மாநகர சபை மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கா அங்கத்தவர் மத்தியில்உரையாற்றும்போது எதிர்வரும் தேர்தலில் நாம் அனைவரும் இந்த அரசுக்கு எதிராகப் போராடவேண்டும், இத்தகைய எமது போராட்டம் எமது வெற்றிக்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

இச்செயற்குழு அங்கத்தவர்கள் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியத்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (வ)

### இராணுவ...

சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்தியடியைச் சேர்ந்த பொ. நவரத்தினம் என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். இதேவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (11)

### பலமான...

மேற்கொண்டுவந்த நீதிபதி ஹம்சா இவ் வழக்கில் அளிக்கப்பட்ட சாட்சியங்களும் டாக்டர் விஜபசிங்கவின் அறிக்கையும் திருப்தியாகவுள்ளதாகவும் இதன்படி பார்க்கும்போது ஜேசுதாசன் பலமான ஆயுதங்களால் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்களினாலேயே மரணமடைந்துள்ளார் என கடந்த வியாழக்கிழமை தீர்ப்புவழங்கியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக அறிக்கைகளை எதிர்வரும் 7ம் திகதியன்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் களுத்துறை வடக்குப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

களுத்துறை சிறைச்சாலையில் கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற இத் தாக்குதல்களில் ஜேசுதாசன் கொல்லப்பட்டதும் மேலும் 30 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே. (வ-7)

### போலி...

விற்கு வழங்கப்பட்டுள்ளது தற்போதய ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருக்கின்றது.

இந்த மோசடியில் மேலும் பலர் ஈடுபட்டிருக்கலாம் என்பதால் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது,

வன்னியிலிருந்து வந்தவர்கள் மீண்டும் வன்னிக்குச் செல்ல தமது பதிவுகளை மேற்கொள்ள வந்தபோதே சிலரது முதியோர் அடையாள அட்டைகள் போலியானது எனக் கண்டுபிடிக்கப்பட்டதாக வவுனியா தெற்கு பிரதே சபை செயலாளர்திருமதிமேரிஇமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

போலியானறபர் சீலைப் பயன்படுத்தியே இவ் அடையாளஅட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதைத் தொடர்ந்து 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் இம்முதியோர் அடையாள அட்டை இனிமேல் 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே வழங்கப்படும் எனவும் பிரதேச செயலாளர். மேலும் தெரிவித்தார் (103)

### அரசுடன்...

வார்த்தை தொடர்பாகவும் இப்பேச்சுவார்த்தையில் கட்சி கலந்துகொள்வதா இல்லையா என்று ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளதாகவும் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தையைத் தொடர்வதாயின் அப்பேச்சுவார்த்தையில் ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில் யார் யார் கலந்துகொள்வது என்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை அரசியலமைப்புச் சீர்திருத்தம் மேற்கொள்வதற்கு முன் தமிழ்ப் பிரதேசங்களில் (வடக்கு - கிழக்கு) சுமுகமான நிலையை தோற்றுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐ. தே, கட்சி இனப்பிரச்சினைத் தீர்விற்கு அரசியலமைப்பு தடையாக உள்ளது என்பதை உணர்ந்துள்ளமையினால் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காணவேண்டும் என்பதில் தீவிர அக்கறை கொண்டுள்ளமையை எடுத்துக் காட்டும் வகையில் இன்றைய கூட்டத்தில் இக்கருத்துக்கள் யாவும் செயற்குழுவினால் பரிசிலனை செய்யப்பட்டு நாளை ஜனாதிபதி சந்திரிகாவுடனான சந்திப்பில் கலந்துகொள்வதெனவும் ஜனாதிபதியை சந்திப்பதாக இருந்தால் இச்சந்திப்பில் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரியா சட்டத்தரணி ஜே.என்.சொக்ஸி ஆகியோர் கட்சியின் சார்பில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுவதாககட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.